# குழந்தை இயேசுவின் சிறு செபமாலை

*இச்செபமாலையின் அமைப்பு திருக்குடும்பத்தின் மகிமைக்காக மூன்று கர்த்தர் கற்பித்த செபம். நம் மீட்பருடைய குழந்தைப் பருவத்தின் பன்னிரு ஆண்டுகளின் நினைவாக பன்னிரு மங்கள வார்த்தை செபம். தூய திருத்துவத்தின் மகிமைக்காக மூன்று திருத்துவ புகழ் செபம்.*

*ஒவ்வொரு கர்த்தர் கற்பித்த செபத்திற்கு முன்னும் "வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடி கொண்டார்" என்றும்.*

*ஒவ்வொரு திரித்துவ புகழ்க்கு முன்னும் 'தூய குழந்தை இயேசுவே! எங்களை ஆசீர்வதியும்; எங்கள் வேண்டுகோளை அளித்தருளும்" என்று சொல்ல வேண்டும்*

***ஒவ்வொரு மங்கள வார்த்தை செபத்திற்கு முன்னும் இயேசுவின் குழந்தைப் பருவத்தைப் பற்றித் தியானிக்க வேண்டிய பேருண்மைகள் இவை:***

01. இறைவனின் மனிதப் பிறப்பு — அருள் நிறைந்த மரியே

02. தூய மரியாள் எலிசபெத்தின் சந்திப்பு — அருள் நிறைந்த மரியே

03. இயேசுவின் பிறப்பு — அருள் நிறைந்த மரியே

04. இடையரின் ஆராதனை — அருள் நிறைந்த மரியே

05.விருத்தசேதனம் — அருள் நிறைந்த மரியே

06. ஞானிகளின் ஆராதனை — அருள் நிறைந்த மரியே

07. இயேசுவின் காணிக்கை — அருள் நிறைந்த மரியே

08. எகிப்து நாட்டிற்குப் பயணம் — அருள் நிறைந்த மரியே

09. எகிப்தில் தங்குதல் — அருள் நிறைந்த மரியே

10. எகிப்திலிருந்து திரும்புதல் அருள் நிறைந்த மரியே

11. நசரேத்தூரில் வாழ்க்கை அருள் நிறைந்த மரியே

12.மறைநூல் மேதைகளுக்கிடையே இயேசு அருள் நிறைந்த மரியே

***செபம்***: குழந்தை இயேசுவே! ஒப்பற்ற உமது வல்லமையை வியத்தகு முறையில் வெளிப்படுத்தி, உமது அற்புத திருக்கர ஆசீரால் எங்களை எல்லா நன்மைகளாலும் நிரப்புகின்றீரே, நம்பிக்கையோடு உம்மைக் கூவி அழைக்கும் பக்தர்களின் மன்றாட்டுக்களுக்கு கனிவாய் செவிமடுத்தருள தயைபுரியும். ஆமென்.

*இச்சிறு செபமாலைப் பக்தி தமக்கு எவ்வளவு பிரியமானது என்பதை தூய மார்கரட் அம்மாளுக்கு அறிவிக்க குழந்தை இயேசு அருள் கூர்ந்தார். பக்தியோடு இதை செபிப்போருக்குத் தனிப்பட்ட வரங்களை, சிறப்பாக கற்பு, தூய்மை என்ற வரங்களை, அளிப்பதாகவும் அவர் வாக்களித்துள்ளார்.*

*அன்புள்ள பெற்றோரே! உங்கள் பிள்ளைகளின் ஞானஸ்நானத் தூய்மையைக் களங்கமின்றி காப்பாற்ற விரும்புகிறீர்களா? இப்பக்திப் பழக்கத்தை அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். குழந்தை இயேசுவைத் தங்கள் முன் மாதிரியாகக் கொண்டு, அவரை நேசிக்கவும், பின்பற்றவும் இச் செபமாலை பக்தி அவர்களுக்கு சிறந்த சாதனம் என்பதை உணரச் செய்யுங்கள்.*